

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் ஒன்றியம், பெருநகர் ஊராட்சிகளில் மக்களுடன் முதல்வர் திட்ட முகம் கைத்தறி மற்றும் துணி நூல் துறை ஆர்.காந்தி, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி. வெ. கணேசன் ஆகியோர் கலந்துகொண்டு நலத்திட்ட உதவிகளை பொதுமக்களுக்கு வழங்கினர். அருகில் கலெக்டர் கலைச்செல்வி மோகன் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க. சுந்தர் எம்எல்ஏ, காஞ்சிபுரம் எம்பி ஜி. செல்வம் ஒன்றிய குழு பெருந்தலைவர் ஹேமலதா கெ. ஞானசேகரன்,ஒன்றிய குழு உறுப்பினர் ருத்ரகோட்டி, ஊராட்சி மன்ற தலைவர் மங்கள கௌரி வடிவேலு, கிளை கழக செயலாளர்கள் வடிவேலு, நாகராஜன், ரமேஷ், சிவா, சந்தானம், வெங்கடேசன், ஒன்றிய இளைஞரணி செயலாளர்கள் யுவராஜ், தினகரன், ராமச்சந்திரன், தமிழ்ச்செல்வன், அரவிந்தன், மகேஷ், ஜீவா, ஆதி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.




திருச்சிராப்பள்ளி கோர்ட்யார்டு ஹோட்டலில் தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறையின் சார்பில் நேற்று முன்தினம் (21.01.2025) நடைபெற்ற நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி (NSNOP) திட்டத்தின் 3ஆவது மாவட்ட அளவிலான மாநாட்டில் தமிழ்நாட்டின் அரசுப் பள்ளிகளில் உள்கட்டமைப்பு மற்றும் கற்றல் தேவைகளை மேம்படுத்துவதற்காக பல்வேறு நிறுவனங்களின் சார்பில் 141 கோடிக்கும் மேலான பங்களிப்பு கடிதங்களை பெருநிறுவனங்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களிடம் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பெற்றுக்கொண்டு விழா சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார், பத்மபூஷன் வேணு ஸ்ரீனிவாசன். திருச்சி சிவா எம்.பி,, துரை வைகோ எம்.பி., நம்ம பள்ளி நம்ம ஊரு பள்ளி திட்டத்தின் உறுப்பினர் செயலர் ஆர்.சுதன், மேம்பாட்டு ஆணையர் முனைவர் அலெக்ஸ் பால் மேனன், ஆலோசகர் இயக்குனர் (MEPZ SEZ) N.V.பாலச்சந்தர். அசோக் லேலண்ட் /பௌண்டேஷன் மற்றும் தலைவர் AL கல்வி ட்ரஸ்ட், பி.செல்ல ராமசாமி. தலைவர். சிஐஐ திருச்சிராப்பள்ளி மண்டலம், ஸ்ரீவத்ஸ் ராம், தலைவர், சிஐஐ, தமிழ்நாடு மற்றும் தமிழ்நாட்டிலுள்ள பெருநிறுவனங்களின் முக்கிய பிரதிநிதிகள் உள்ளிட்ட 400 க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டனர்.

### விழுப்புரம் தெற்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர்

# இளைஞர் அணி அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் அறிமுக - ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர். பொன்.கௌதமசிகாமணி அறிக்கை!

விழுப்புரம், ஜன.23-

விழுப்புரம் தெற்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அறிமுக ஆலோசனைக்கூட்டம் நடைபெறுகிறது.

மாவட்ட பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி அறிக்கை வருமாறு:-

கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, வனத்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி அவர்களின் ஆலோசனைக்கிணங்க விழுப்புரம் தெற்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அறிமுக ஆலோசனைக்கூட்டம் மாவட்ட பொறுப்பாளராகிய எனது (டாக்டர். பொன்.கௌதமசிகாமணி) தலைமையில் இன்று (23.01.2025 வியாழக்கிழமை) அன்று காலை 9.00 அளவில் விழுப்புரம் கலைஞர் அறிவாலயம் தளபதி அரங்கத்தில் மாநில இளைஞர் துணைச் செயலாளர்



ப.அப்துல் மாலிக் முன்னிலையில் நடைபெறுகிறது.

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் செ.தினகரன் வரவேற்புரையாற்றுகிறார். மாவட்ட துணை அமைப்பாளர்கள் எஸ்.அன்பு, TDJ ராஜவேல், ச.பாலாஜி, ப.கலைவாணன், ஏ.சி.கே.பிரேம், ஏ.கே. தேவேந்திரன் உள்ளிட்ட ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு விழுப்புரம் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர். பொன். கௌதம சிகாமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### கிராமப்பகுதிகளில் வாழும்

# பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்திடும் வகையில் எண்ணற்றத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார் முதல்வர்!

## அரிமளத்தில் அமைச்சர் எஸ்.ரகுபதி பேச்சு!

புதுக்கோட்டை. ஜன.23-

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி, அரிமளம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், முடிவுற்ற பல்வேறு பணிகளை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி 20.01.2025 அன்று திறந்து வைத்து, ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றிய அலுவலக புதிய கட்டுமானப் பணியினை அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார்.

பின்னர் சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கிராமப்பகுதிகளில் வாழும் பொதுமக்களின் வாழ்க்கை தரத்தினை மேம்படுத்திடும் வகையில் எண்ணற்றத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், கிராமப்புறங்களுக்குத் தேவையான சாலை வசதி, மின் வசதி, சுகாதார வசதி உள்ளிட்ட பல்வேறு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி பொன்னமராவதி, அரிமளம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், முடிவுற்ற பல்வேறு பணிகள்



திறந்து வைத்து, ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றிய அலுவலக புதிய கட்டுமானப் பணி அடிக்கல் நாட்டி துவக்கி வைக்கப் பட்டது.

அதன் அடிப்படையில், பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம், மேலசிவபுரி கல்லான்சரலை, தொட்டியம் பட்டி காமராஜர் நகர், இந்திராநகர் பள்ளிவாசல் பின்புறம், உலகம்பட்டி மெயின்ரோடு அருகில் ஆகிய இடங்களில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மின் மாற்றிகளையும், பொன்னமராவதி அரசு போக்குவரத்துப் பணிமனையில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ், ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள போக்குவரத்து கழக ஓட்டுநர் மற்றும் நடத்துனர் ஆகியோர் தங்குவதற்கான ஓய்வுக் கூடம் கட்டிடத்தினையும், கீழத்தானியத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மையக் கட்டிடத்தினையும், அரசமலையில் புதிதாக கட்டப்பட்டுள்ள மகளிர் சுயஉதவிக்குழு கட்டிடத்தினையும், நெருஞ்சிகுடியில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஊராட்சிமன்ற அலுவலக கட்டிடத்தினையும் திறந்து வைக்கப்பட்டது.

அரிமளம் ஊராட்சி ஒன்றியம், கே.புதுப்பட்டி, நயாரா பெட்ரோல் பங்க் அருகில், சமுத்திரம் ஊராட்சி, தஞ்சாவூர் காமண்டி திடல், கீழப்பனையூர் ஊராட்சி, காமாட்சிபுரம் இந்திரா செல்வம் மண்டபம் பின்புறம், ஓணாங்குடி சிவகமலம் வீடு அருகில் ஆகிய இடங்களில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மின்மாற்றிகளையும், கைக்குலான்வயல் ஊராட்சி, கே.புதுப்பட்டியில் புதிதாக கட்டப்பட்டுள்ள நியாயவிலைக் கடை கட்டிடத்தினையும், சமுத்திரம் ஊராட்சியில், புதிதாக கட்டப்பட்டுள்ள தாஞ்சூர் கூட்டுறவு பால் கொள்முதல் நிலைய கட்டிடத்தினையும், ஓணாங்குடி ஊராட்சி, சத்திரம் மற்றும் மிரட்டு நிலை ஆகிய இடங்களில் புதிதாக கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மையக் கட்டிடங்களையும் திறந்து வைக்கப்பட்டது.

மேலும், ஆவுடையார் கோவில் ஊராட்சி ஒன்றியத்தில், புதிதாக கட்டப்படவுள்ள ஆவுடையார் கோவில் ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டுமானப் பணி அடிக்கல்நாட்டி துவக்கி வைக்கப்பட்டது. இப்பணியினை விரைவாகவும், தரமாகவும் முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவர தொடர்புடைய அரசு அலுவலர்களுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது.

எனவே, பொதுமக்களின் நலன் காக்கும் வகையில் செயல்படுத்தப்பட்டுவரும் இதுபோன்ற மக்கள் நலத்திட்டங்களை அனைவரும் உரிய முறையில் பயன்படுத்திக்கொண்டு தங்களது வாழ்வில் முன்னேர வேண்டும் எனவும் சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி தெரிவித்தார்.

### தஞ்சை மத்திய மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்றத் தொகுதிகளில்

# பி.எல்ஏ-2, பி.எல்.சி - நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. அறிக்கை!

தஞ்சை, ஜன. 23 -

தஞ்சை மத்திய மாவட்டத்திற்குட்பட்ட திருவையாறு, தஞ்சாவூர், ஒரத்தநாடு ஆகிய தொகுதிகளில் நடைபெற உள்ள பி.எல்ஏ-2, பி.எல்.சி ஆலோசனைக் கூட்டங்களில் பி.எல்ஏ-2, பி.எல்.சி மற்றும் நிர்வாகிகள் தவறாது கலந்து கொள்ள வேண்டுமாய் தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசே



கரன் எம்.எல்.ஏ அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு :-

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைப்படி தஞ்சை மத்திய மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்ற தொகுதிகளில் 2026 - சட்டமன்ற பொது தேர்தல் மு ன்னேற்பாடு பணிகள் குறித்து பி. எல்ஏ-2, பி.எல்.சி மற்றும் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டங்கள் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் மற்றும் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்பட்டுள்ள தொகுதி மேற்பார்வையாளர்கள் முன்னிலையில் கீழ்க்கண்ட தினங்களில் நடைபெற உள்ளது.

23.01.2025 வியாழன் காலை 10.00 மணியளவில் தஞ்சாவூர், நாஞ்சிக் கோட்டை ரோடு காவேரி திருமண மண்டபத்தில் தஞ்சை சட்டமன்ற தொகுதி பி.எல்ஏ-2, பி.எல்.சி மற்றும் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம், தொகுதி மேற்பார்வையாளர் ஏ.கே.எஸ்.விஜயன் முன்னிலையில் நடைபெற உள்ளது.

23.01.2025 வியாழன் மாலை 04.00 மணியளவில் ஒரத்தநாடு முத்தமிழ் அரங்கில் ஒரத்தநாடு சட்டமன்ற தொகுதி பி.எல்ஏ-2, பி.எல்.சி மற்றும் நிர்வாகிகள் ஆலோசணைக்கூட்டம், தொகுதி மேற்பார்வையாளர் பரணி இ.கார்த்திகேயன் முன்னிலையில் நடைபெற உள்ளது.

28.01.2025 செவ்வாய் காலை 10.00 மணிக்கு பூதலூரர் பி.கே.ஏ.பி திருமண மண்டபத்தில் திருவையாறு சட்டமன்ற தொகுதி பி. எல்ஏ-2, பி.எல்.சி மற்றும் நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம், தொகுதி மேற்பார்வையாளர் நாகை.கோ. மனோகரன் முன்னிலையில் நடைபெற உள்ளது.

அதுசமயம் மேற்கண்ட கூட்டத்தில் பி.எல்.ஏ-2, பி.எல்.சி, மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், நிர்வாகிகள், கிளைக் கழக நிர்வாகிகள் தவறாது கலந்துக்கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு தஞ்சை மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளார்.



கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம், உளுந்தூர்பேட்டை சட்டமன்ற தொகுதி திமுக சார்பில் அவசர ஆலோசனைக் கூட்டம் வடக்கு மாவட்ட கழக அவைத் தலைவரும், உளுந்தூர்பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான ஆ.ஜெ.மணிக்கண்ணன் தலைமையில் உளுந்தூர்பேட்டை ஜெயராம் தெய்வானை திருமண மண்டபத்தில் நடைபெற்றது, இக்கூட்டத்தில், வடக்கு மாவட்ட கழக செயலாளரும், சங்கராபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான தா.உதயசூரியன் முன்னிலை வகித்து பேசுகையில், அனைத்து ஒன்றிய நகர கழகத்தின் சார்பில் பாகநிலை முகவர்கள் (பி.எல்.ஏ2) மற்றும் பாகநிலை உறுப்பினர்களுடன் (பி.எல்.சி) ஆய்வு & ஆலோசனைக்கூட்டம் நடத்துவது குறித்தும், பல்வேறு கழக ஆக்கப்பணிகள் குறித்தும் நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கினார், மேலும் இக்கூட்டத்தில் திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தலைமை செயற்குழு உறுப்பினரும் உளுந்தூர்பேட்டை சட்டமன்ற தொகுதி பார்வையாளருமான இரா.ஸ்ரீதரன் மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக உடன்பிறப்புகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### தி.மு.க. மாணவர் அணி – ஊசுடு தொகுதி தி.மு.க. சார்பில்

# மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

## அமைப்பாளர் இரா. சிவா அறிக்கை!

புதுவை, ஜன. 23-

புதுச்சேரி மாநில தி.மு.க. மாணவர் அணி மற்றும் ஊசுடு சட்டமன்ற தொகுதி தி.மு.க. சார்பில் மொழிப்போர் தியாகிகளுக்கான விரவணக்க நாள் பொதுக்கூட்டம் 25-ஆம் தேதி மாலை 6.00 மணிக்கு குருமாம்பேட்டில் நடக்கிறது.

மாநில மாணவர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் எஸ்.பி. மணிமாறன் தலைமை வகிக்கிறார். ஊசுடு தொகுதி செயலாளர் பி.சா. இளஞ்செழியப்பாண்டியன், தொகுதி அவைத் தலைவர் இரா. கண்ணன் மற்றும் தொகுதி நிர்வாகிகள் முன்னிலை வகிக்கிறார்கள். தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.எம்.பி. லோகையன் வரவேற்றுப் பேசுகிறார்.

தலைமைக் கழக சொற்பொழிவாளர் கந்திலி கரிகாலன், புதுச்சேரி மாநில திமுக அமைப்பாளர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா, தலைமைக் கழக பேச்சாளர் குடந்தை ராமகிருஷ்ணன் ஆகியோர் சிறப்புரை ஆற்றி, மொழிப்போர் தியாகிகளுக்கு பொற்கிழி வழங்கி கவுரவிக்கிறார்கள்.

தொடர்ந்து மாநில அவைத்தலைவர் எஸ்.பி. சிவக்குமார், முன்னாள் எம்.பி. சி.பி. திருநாவுக்கரசு, சட்டமன்ற உறுப்பினர்கள் வி. அனிபால் கென்னடி, இரா. செந்தில்குமார், எல். சம்பத் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகிறார்கள்.

மாநில கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் உத்திராபதி நன்றி கூறுகிறார்.

மாநில மாணவர் அணி



துணை அமைப்பாளர்கள் கண்ணன், ஸ்டீபன்ராஜ், ஸ்ரீஹரி, அமுதன், கீர்த்தி எழினி, தமிழ்மகள் ஜான்சி ராணி, முத்தரசன் மற்றும் ஊசுடு தொகுதியில் உள்ள மாநில நிர்வாகிகள் மதிவாணன், வீரராகவன், முருகையன், அரிதாஸ், தேவநாதன், கலியமூர்த்தி, விஜி (எ) வெங்கடேசன், சுமித்ரா, அனந்தராமன், அய்யனார் ஆகியோர் ஏற்பாடு செய்கின்ற மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்தும் வரலாற்று சிறப்புமிக்க இந்த கூட்டத்தில், மாநில கழக நிர்வாகிகள், மொழிப்போர்த் தியாகிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், தொகுதி செயலாளர்கள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், கிளைக் கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேணுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு இரா.சிவா தெரிவித்துள்ளார்.



மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயிலில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை சார்பில் 500 பயனாளிகளுக்கு ரூ.4.67 கோடி மதிப்பில் இலவச வீட்டு மனை பட்டா ஆணையை பிறப்டுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் வழங்கினார். உடன் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.பி.மகாபாரதி, மாவட்ட துணைச் செயலாளர் மு.ஞானவேலன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் பி.எம்.அன்பழகன், எம்.அப்துல்மாலிக், அமிர்த.விஜயகுமார், ஏ.ஆர்.ராஜா, கு.வைத்தியநாதன், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்ட பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர் மற்றும் பலர் உள்ளனர்.